சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

Case No. OS.49/2021

2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 01ம் நாள் செவ்வாய்கிழமை

வாதி தரப்பு சாட்சியாகிய வா.சா.1-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி.சித்ரா பென்ஞ் கிளார்க் நிலை 2 என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாலமுருகன் | தொழில் | |
| தந்தை/கணவர் பெயர் | சுந்தரம் | ஜாதி | |
| கிராமம் | ஒண்ணுபுரம் | சமயம் | |
| தாலுக்கா | ஆரணி | வயது | |

**01.08.2023** முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். பிரதிவாதிக்கெதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விவரம் எனக்குத் தெரியும். என் தரப்பு சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைதான். என் தரப்பு சான்றாவணங்களாக, 29.01.2007 தேதியிட்ட அசல் அடமானக் கடன் பத்திரம் **வா.சா.ஆ.1**, 13.06.2012 தேதியிட்ட அடமானக் கடன் பூர்த்தி பைசல் ரசீது அசல் **வா.சா.ஆ.2,** 01.04.2011 தேதியிட்ட அசல் கடனுறுதிச்சீட்டு ரூ.1,20,000/-த்திற்கானது **வா.சா.ஆ.3**, 13.06.2012 தேதியிட்ட கிரய ஒப்பந்த பத்திரம் அசல் வா.சா.ஆ.4, 20.12.2017 தேதியிட்ட உடன்படிக்கை உறுதிமொழிப்பத்திரம் **வா.சா.ஆ.5,** 01.12.2020 தேதியிட்ட உடன்படிக்கை உறுதிமொழிப்பத்திரம் **வா.சா.ஆ.6,** 18.01.2021 தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு நகல் **வா.சா.ஆ7.** 23.01.2021 தேதியிட்ட பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.8,** அஞ்சலக ரசீதுகள் **வா.சா.ஆ.9,** 1ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.10,** 2ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.11**, 3ம் பிரதிவாதியின் டிராக் கன்சைன்மென்ட் **வா.சா.ஆ.12,** 4ம் பிரதிவாதியின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.13,** பிரதிவாதி வழக்கறிஞரின் அஞ்சலக ஒப்புகை அட்டை **வா.சா.ஆ.14,** மேற்கொண்டு ஆவணங்களை குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.